KB14-2-3-TA

# இயேசுவே மேசியா என்பதை உறுதிபடுத்திடும் 16 தீர்க்கதரிசனங்கள் - பாகம் 2 - நிகழ்ச்சி 3

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு கூhன் அன்கர்பர்க் நிகர்;ச்சியில்:. இந்த ப{மிக்கு விசெசூpத்த நபரான மெசியாவை அனுப்ப பொவதாக தெவன் ஏற்கனவெ தமது தீர்க்கதரிசிகள் ஷலம் பல வருட';களுக்கு முன்பாகவெ டிசால்லியிருக்கிறாரா, குறிப்பாக என்ன தீர்க்கதரிசன';களை டிகாடுத்திருக்கிறார், எபிரெய வெதத்தில் எந்த பகுதிகளில் அந்த வார்த்தைகள் இருக்கிறது, அந்த தீர்க்கதரிசன';கள் உரைக்கப்பட்ட ய{த கூன';கள் வரப்பொகிற மெசியாவைக் குறித்து டிசால்லப்பட்ட குறிப்பான வார்த்தைகளை பஜரிந்துடிகாண்டார்களா, இந்த டிசய்திடிதாடரில் நாம் சுமார் 16 தீர்க்கதரிசன வார்த்தைகளை பார்த்திடலாம் ஆதாம் முதல் ஆபிரகாம் வரை:. மொசெ முதல் தாவீது வரை:. ஏசாயா முதல் தானியெல் சகரியா வரை. நாம் கெட்கலாம்:. இந்த மறுக்க முழயாத தீர்க்கதரிசன';கள் இயெசு தான் மெசியா என்பதை நிருபித்துள்ளதா,

எனது முதல் விருந்தினர் டாக்டர். வால்டர் டிபய்சர். அவர் இப்பொதுள்ள இறையியல் மெதைகளில் ஒருவர் மற்றும் இன்றைக்கு அடிமரிக்காவில் எபிரெய பத வசன';களின் வெத வல்லுநர். டாக்டர் டிகய்சர் முதன்மை தலைவரும் பிரசித்தடிபற்ற

பர்ய ஏற்ப்பாட்டு விரிவஜரையாளராகவஜம் கார்டன் - கான்டிவல் இறையியல் டிசமினரி ஞாமில்டனில் இருக்கிறார்.:. மா!;காவ்டிசட்!;. இரண்டாவதாக.:. டாக்டர் டெரல் பாக். அவரும் நிகர்;கால இறையியல் வல்லுநர்களில் ஒருவர் பஜதிய ஏற்ப்பாட்டு வல்லுநராக இருக்கிறார். அவர் பஜதிய ஏற்பாட்டு ஆராய்ச்சியில் முதன்மை ஆராய்ச்சி விரிவஜரையாளராக இருக்கிறார் பாரம்பரிய கலாச்சார அமைப்பின் ஒரு';கிணைப்பாளராக டாலா!; இறையியல் டிசமினரியில் இருக்கிறார் டாலா!;.:. டிடக்சா!;. இந்த விசெசூpத்த நிகர்;ச்சியில் இணைந்திடு';கள் கூhன் அன்கர்பர்க் நிகர்;ச்சி.

*****

**டாக்டர். ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். நாம் மிகவும் சுவாரஸ்யமான தலைப்பை பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம். எபிரேய வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கும் மேசியாவைக் குறித்த தீர்க்கதரிசனங்கள், இயேசுவை குறிக்கிறதா அல்லது வேறு நபரை குறிக்கிறதா? அவற்றின் கருத்து என்ன? அதை கவனிக்க வேண்டியது அவசியமா? இன்றைக்கு நம்மத்தியில் இரண்டு வல்லுநர்கள் இருக்கிறார்கள். டாக்டர் வால்டர் கெய்சர் முதன்மை தலைவரும் பிரசித்தடிபற்ற பர்ய ஏற்ப்பாட்டு விரிவஜரையாளராகவஜம் கார்டன் - கான்டிவல் இறையியல் டிசமினரி ஞாமில்டனில் இருக்கிறார்.:. மா!;காவ்டிசட்!;. இவர் நாற்பது புத்தகங்களின் ஆசரியர். மற்றும் டாக்டர் டேரல் பாக் இவர் பஜதிய ஏற்பாட்டு ஆராய்ச்சியில் முதன்மை ஆராய்ச்சி விரிவஜரையாளராக இருக்கிறார் பாரம்பரிய கலாச்சார அமைப்பின்

ஒரு';கிணைப்பாளராக டாலா!; இறையியல் டிசமினரியில் இருக்கிறார் டாலா!;ஃ டிடக்சா!;. இவர் 30 புத்தகங்களை எழுதியிருக்கிறார்.

சரி, டாக்டர் பாக், இன்றைக்கு உங்களிடத்திலிருந்து ஆரம்பிக்கலாம். நாம் வேதத்தைப் பார்க்கும்போது, இந்த பழைய ஏற்ப்பாட்டில் பல புத்தகங்கள் இருக்க அதை எழுதியவர்களில் சிலர், தீர்க்கதரிசியாக இருந்தனர், வேறுசிலர் அப்படியில்லை. உண்மைய சொன்னா, அந்த எழுதப்பட்ட, அந்த வார்த்தைகளில் நாம் கவனிக்க வேண்டிய விஷயம் இருக்கிறது, தேவன் 2000 வருடங்களுக்கு முன்பு சொன்ன சில குறிப்பிட்ட விஷயங்களை கவனிக்கவேண்டும். ஏன் அதை நாம் ஜாக்கிரதையாக கவனிக்கவேண்டும்? அதற்கு முன்பு முந்தைய வாரங்களில் நமது நிகழ்ச்சியை பார்க்க தவறிய மக்களுக்காக அந்த தொகுப்பை சுருக்கமாக சொல்லுங்கள். நாம் ஏற்கனவே பார்த்த காரியங்களின் முக்கியமான  சில குறிப்புகளை முதலில் பகிர்ந்துகொண்ட பிறகு இன்றைய நிகழ்ச்சிக்கு போகலாம்.

**டாக்டர். டேரல் பாக:** வெல், நீங்க ஏன் இதை கவனமாக கவனிக்க வேண்டுமென்றால் இது மிகவும் முக்கியமான காரியமாகும். அதற்காக தான் இங்கு வந்திருக்கிறோம். நான் ஏன் இங்க உட்காரவேண்டும்? நீங்க எதற்காக இங்க இருக்கீங்க? நீங்க எதற்காக இந்த டிவி நிகழ்ச்சிய பார்க்கணும்? இதுக்கெல்லாம் என்ன காரணம்? நம்முடைய வாழ்க்கையில் நாம் கடந்து வரும் சூழ்நிலைகள் காரணமாக இந்த கேள்விகளை நாம் பொருபடுத்தாமல் நிராகரித்துவிடுகிNறும். ஆனால் ஒவ்வொரு நொடியிலும் நிதானித்து

செயல்படவேண்யெது மிகவும் அவசியம், "நா ஏ இங்க இருக்கே," தேவன் நாம் எதற்காக இங்கிருக்கிறோம் என்பதை நமக்கு சொல்லுகிறவராக இருக்கிறார், அவர் என்ன செய்கிறார், எதற்காக நம்மை உருவாக்கினார், அவரால் உருவாக்கப்பட்ட நாம் செய்ய வேண்டியதை அவர் சொல்லுவார்.

எனவே இந்த சம்பவம் ஆதியில் ஆதாம் ஏவாளிடமிருந்து தொடங்குகிறது என்பதை பார்த்தோம் ஆதியாகமம் 3. நமக்கு ஆரம்பத்தில் சொல்லப்பட்ட விஷயம் ஸ்திரீயின் வித்தாக வருபவர் - எந்தவொரு மனிதனாகவும் இருக்கலாம் --- அப்படி அந்த வித்திலிருந்து எழும்புகிறவர் சாத்தானின் ஆற்றல்களை முற்றிலும் அழித்திடுவார் என்று சொல்லப்பட்டது. அதன்பிறகு இந்த நபர் சேமினுடைய வம்சத்திலிருந்து தோன்றுவார் என்று சொல்லப்பட்டது. அது ஆதியாகமம் 9ல் இருக்கிறது. அதன்பின்பு ஆதியாகமம் 12, ஆபிரகாமிலிருநது ஒரு சந்ததி உருவாகும் அது இஸ்ரவேல் எனப்படும் என்று சொல்லப்பட்டது. அந்த சந்ததியிலிருந்து ராஜாக்கள் எழும்புவார்கள். அது ஈசாக்கிடமோ யாக்கோபினிடமாகவோ இருந்திருந்தாலும் நாம் கவனிக்கும் விஷயம் "ராஜாக்கள் தோன்றுவார்கள்". உபாகமம் 18ஐ பார்க்கும்போது இந்த நபர் மோசேயைப் போல தீர்க்கதரிசியாக இருப்பார் என்று சொல்லப்பட்டது. அவர் தீர்க்கதரிசியாக தலைவராயிருப்பார். அவர் வல்லமையான கிரியைகளை நடப்பிப்பார். அவர் தேவனோடு முகமுகமாய் பேசிடுவார் அற்புதங்களையும் அடையாளங்களையும் அவர் செய்திடுவார்.

அதன்பிறகு ஒரு குறிப்பிட்ட வம்சத்தின் வழியாக அவர் தோன்றுவார் என்பதை பார்த்தோம், அதுதான் தாவீதின் வம்சம். இந்த ராஜாவை, பற்றி ஏசாயா கூறுகிறார், அவர் அதிசயமானவர் ஆலோசனை கர்த்தர் சமாதானப்பிரபு. இவரைப் பற்றி, சங்கீதம் 110:1 கூறுகிறது, அவர் தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்திருப்பார் அவருடைய பிரசன்னத்தில் இருப்பார் அவருடைய அருகிலிருந்து காரியங்களை நடப்பித்திடுவார். இவையனைத்தும் இணைக்கப்பட்டதாக உயர்த்தப்பட்ட மேசியாவை நமக்கு வெளிப்படுத்துகிறது. இந்த நபரைக் குறித்து நாம் பார்த்த காரியங்கள் நம்மை ஒரு தீர்விற்கு நேராக நடத்தி வருகிறது.

இதற்கிடையில் ஆச்சரியமான ஒன்றை கவனித்தோம் அதுதான் ஏசாயா 53. ஏசாயா 53 கூறுகிறது, இந்த பகுதியானது இந்த நபரைக் குறித்து நாம் இதுவரை பார்த்த உயர்த்தப்படுதல் சமாதானம் மற்ற காரியங்களுக்கு முற்றிலும் மாறுபட்ட கோணத்தில் இருக்கிறது. நாம் மேலே செல்வதற்கு முதலாவது தாழ்த்தப்படுவோம் என்று கூறுகிறது. தாழ்த்தப்படுதல் என்றால் சிலுவையின் பாடுகளை அனுபவித்தல், பாவத்திற்கு மரித்தல், நம்முடைய சார்ப்பில், நம்முடைய தண்டனையை ஏற்றுக்கொண்டார், நம்முடைய இடத்தில் நமக்கு பதிலாக நம்முடைய வேதனைகளை சுமந்து நிற்பது. இவை எல்லாவற்றையும் சகித்து கொண்டு உனக்கு நேராக என் அன்பிக் கரத்தை விரித்து வைத்திருக்கிறேன். அதுதான் மேசியாவின் கதையாக இருக்கிறது. அது அன்பின் கதை. நாம் எதற்காக இங்கிருக்கிறோம் என்பதை பற்றிய கதை.

**ஆன்கர்பெர்க்:** ஆமாம். அது கோல்டிலாக்ஸ் மற்றுமு; திரி பியர்ஸ் போன்ற கதைகள் போன்றதல்ல. இவையனைத்தும் வரலாற்றில் பதிக்கப்பட்ட சம்பவங்கள், வசனங்களில் சொல்லப்பட்ட உண்மைகள்.

**பாக:** தேவனே உங்கள் அருகில் வந்து சொல்வது போன்றதாகும், “இதெல்லாம் ஏன் நடக்கிறதென்று உனக்குச் சொல்லுகிறேன். நீ எதற்காக இங்கிருக்கிறாய் என்றும் நீ எப்படி என்னோடு உறவுகொள்ள முடியும் என்பதை சொல்லிடுவேன், நீ வாழ்க்கையை, எப்படி வாழ வேண்டும், என்பதையும் சொல்லிடுவேன் அதனால் நீ முற்றிலும் மாறுபட்ட கோணத்தில் பார்த்திடுவாய், வாழ்க்கை அர்த்தமுள்ளதாயிருக்கும் என்கிறார்.

**ஆன்கர்பெர்க்:** யா.நீங்க சொன்ன வார்த்தை எனக்கு பிடிச்சுருக்கு, புள்ளிகளை இணைத்திடும் செயல்போன்றது. ஏனென்றால் ஆதாம் ஏவாள் என்று தொடங்கும் போது அது வரலாற்றை சம்பந்தப்படுத்தும் விஷயமாக இருக்கிறது, அதன்பிறகு நீங்கள் தொடர்ந்து பார்க்கும்போது தேவன் தாமே இடைபட்டு அவர் சிலருக்கு வெளிப்படுத்திய தகவல்கள் கொடுக்கப்பட்டிருப்பதை பார்க்கிறோம். ஆதியில் இருந்தவர்களுக்கு புதிரினுடைய சில பாகங்கள் கொடுக்கப்பட்டதால் என்ன நடக்குமென அறிந்துகொள்வதில் சிக்கல் இருந்தது. ஆனால் அதிக அதிகமாக பெற ஆரம்பித்தனர். இந்த புள்ளிகளை இணைப்பதைப் பற்றி சொல்லுங்க.

**பாக:** சரி, அதாவது ஒரு புதிருக்கு ஒப்புமையான விஷயங்களை கண்டுபிடிப்பது சிறந்த செயலாக இருக்கும், ஏன்னா உங்ககிட்ட புதிரினுடைய ஆயிரம் துண்டுகள் இருக்கும்போது முதல் துண்டை நீங்க மேஜையில் முதல்ல வைச்சதும், இது என்னவாயிருக்குன்னு நினைப்பீங்கல்ல? இதோடு எத இணைக்கலாம்? இது என்னவாயிருக்க வாய்ப்பிருக்கு? அப்ப, அந்த இடத்தில், மற்ற 300 துண்டுகளை எடுத்து மாத்தி மாத்தி வைத்து அதை சரியாக பொருத்த நினைப்பீங்க. திடீரென்று ஒரு துண்டு சரியா பொருந்தியதும், ஓ, இது என்னவென்று எனக்கு புரியறமாதிரி இருக்குன்னு சொல்வீங்க. அந்த இரகசியம் உங்களுக்கு வெளிப்படுகிறது. அதைப்போல தான் வசனங்களிலும் பார்க்க முடியும். அனைத்தையும் ஒன்றாக பெற்றிருக்கும் புதிர்தான் இது. ஒவ்வொன்றையும் அதினதின் ஸ்தானத்தில் வைக்கும்போது, திடீரென்று என்ன நடக்கிறது என்ற தெளிவு உங்களுக்கு ஏற்பட துவங்கும், இப்ப நடக்கும் காரியமும் வெளிப்படும். அந்த காரியங்களில் செயல்பாட்டில், அதை நாம் வெளிப்பாடுகளின் பிரயாணம் என்கிறோம், இந்த வெளிப்பாடுகளின் செயல்பாட்டில் தேவனுடைய தன்மையை நாம் புரிந்துகொள்ள முடியும், அவருடைய திட்டத்தையும் அவரையும் நாம் அறிந்துகொள்ள முடியும்.

**ஆன்கர்பெர்க்:** மிக அருமையாக சொன்னீர்கள். இவையணைத்தையும் ஒன்றினை நீங்க சொன்ன விதம் என்னை மெய்சிலிர்க்க வைத்தது. சரி, டாக்டர் கெய்சர், நீங்கள் என்னை

வியக்க வைக்கிறீர்கள், இப்ப அடுத்த தீர்க்கதரிசன வார்த்தைய பார்க்கலாம். நாம இங்கிருந்து அங்கிருந்து சில வார்த்தைகளை எடுத்து பார்க்கும்படிக்கு இப்படி செய்வதில்லை. அதாவது, இங்க மற்றொரு தீர்க்கதரிசி சொல்வதை பார்க்கலாம், அவர்தான் எரேமியா. போன வாரம் ஏசாயாவிலிருந்து பார்த்தோம். இவரும் ஒரு தீர்க்கதரிசி, இவர் சொல்லிய வார்த்தைகள் யூதருடைய வேதத்தில் இருக்கிறது, அது அர்த்தமுள்ளதாகவும் இருக்கிறது. அதனுடைய அர்த்தத்தை பார்த்தால் வியப்பாக இருக்கிறது, ஆல்ரைட். அதை நான் திரையில் காண்பிக்கிறேன் அதனால் அனைவரும் பார்ப்பதற்கு வசதியாக இருக்கும். இது எரேமியா 23:4-5ல் இருக்கிறது. அவர் சொல்கிறார், “இதோ”, மறுபடியும், இதோ என்ற வார்த்தை வருகிறது, “நாட்கள் வருமென்று, கர்த்தர் சொல்கிறார், யாவே, அப்பொழுது தாவீதுக்கு எழும்பப்பண்ணுவேன், நாம் ஏற்கனவே பார்த்த நபர் தான் இவர், தாவீது ராஜாவிற்கு, நீதியுள்ள கிளை எழும்பும்.” இதைக் குறித்து தான் இன்றைக்கு பேசப்போகிறோம். இந்த உலகில் இந்த நீதியுள்ள கிளை யார்? “அவர் ராஜாவாக இருந்து ஞானமாய் ராஜரிகம்பண்ணுவார்”. இந்த வசனத்தின் இறுதிபகுதி சொல்கிறது, “அவருக்கு இடும் நாமம் என்னவென்றால் யேகோவா, நமது நீதியாயிக்கிற கர்த்தர்.” இங்கு பல வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது ஆனால் நமக்கு இப்படிபட்ட வார்த்தைகளின் அப்பியாசம் கிடையாது, அதாவது கிளை வித்து போன்ற வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த கிளையை குறித்த முக்கியத்துவம் என்ன? மேசியாவை எதற்காக

கிளை என்ற வார்த்தையேர்டு ஒப்பிட வேண்டும், மேசியாவுக்கு கிளைக்கும் சம்பந்தம் என்ன?

டாக்டர். வால்டர் கெய்சர்: அதாவது, ஜான், வேதத்தில் சுமார் ஐந்து முறை கிளை என்ற தலைப்பின் கீழ் மேசியாவைக் குறித்த வாக்குத்தத்தங்கள் சொல்லப்பட்டடிருக்கிறது. வினைச் சொல்லாக பயன்படுத்தப்பட்டுள்ளது. விதை நிலத்தில் விழுந்து அது செடியாகி பிறகு பெரிய கிளைகளுக்க மரமாகிறது. ஆதி திருச்சபையின் போதகர்கள் 4 பகுதிகளை பயன்படுத்தி மேசியாவை 4 விதங்களில் வெளிப்படுத்தி சொல்வதில் ஆர்வத்தோடிருந்தன். அதில் ஒன்றை எரேமியா 23ல் வாசிக்கலாம், அதுவே மறுபடியும் எரேமியா 33ல் வருகிறது. அங்கு இவர் தாவீதின் கிளை என்று சொல்லுகிறார், தாவீதிக்கு நீதியின் கிளை முளைக்கும். தேவன் சொல்கிறார் இந்த தாவீதுக்கு நான் நீதியின் கிளையை முளைக்கப்பண்ணுவேன் துளிர்க்கப்பண்ணுவேன் - எனவே அதே வினைச் சொல்லைதான் இங்கும் பயன்படுத்துகிறார் “கிளை” அவர் அதை முளைக்கப்பண்ணுவார் - அவர் பூமியிலே நியாயத்தையும் நீதியையும் நடப்பிப்பார். இதை, ஆதி திருச்சபையின் போதகர்கள், மத்தேயு மேசியாவை வெளிப்படுத்துவதோடு இணைத்தனர். அவர் ராஜாவாக வருவார் அவர் தாவீதின் வம்சத்திலிருந்து தோன்றுவார்.

ஆனால் நாம் ஏசாயா 4:2ஐ பார்க்கும்போது, “அந்நாளிலே கர்த்தரின் கிளையானது.” இங்கு கர்த்தரின் என்பது மூலதனத்தை குறிக்கிறது, இந்த கிளைக்கு மூலாதாரமாக இருப்பது ஜீவனுள்ள தேவனாகிய கர்த்தர். எனவே மத்தேயுவினுடைய வெளிப்பாட்டின் படி இயேசுவை

தாவீதின் வம்சத்தில் வருகிறவராக பாருங்கள் என்பதாக இருக்கிறது," 2 சாமுவேல்7, 1 நாளாகமம் 17ல் உள்ளது, இந்த வேத பகுதியில், "அந்நாளில்" என்பது எதிர்காலத்தை கடைசி காலத்தை குறிக்கிறது, இறுதிகாலம், "கர்த்தரின் கிளை அலங்காரமும் மகிமையுமாயிருக்கும் பூமியின் கனி இஸ்ரவேலில் தப்பினவர்களுக்கு சிறப்பும் அலங்காரமுமாயிருக்கும்." அதைதான் யோவான் சுவிசேஷமும் எடுத்துரைக்கிறது. யோவான் தான் இந்த புத்தகத்தை எழுதியதாக சொல்கிறார், அதோடு, "நீங்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும்படியாக எழுதுகிNறுன் என்கிறார்," யோவான் 20:31, அதனால் விசுவாத்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாக எழுதப்பட்டிருக்கிறது." எனவே, அவர் ராஜா மட்டுமல்ல, தெய்வத்துவமுள்ளவரும், எல்லாருடைய இரட்சகருமாய் இருக்கிறார்.

இன்னும் இரண்டு பகுதிகளை சகரியாவிலும் பார்க்கிறோம். அங்கு சொல்லும்போது, ""இப்போதும் பிரதான ஆசாரியனாகிய யோசுவாவே, நீ கேள்: உனக்கு முன்பாக உட்கார்ந்திருக்கிற உன் தோழரும் கேட்கக்கடவர்கள். இவர்கள் அடையாளமாயிருக்கிற புருஷர். இதோ கிளை என்னப்பட்டவராகிய என் தாசனை நான் வரப்பண்ணுவேன்." இந்த இடத்தில் அவரை தாசன் மனுஷன் என்று சொல்லப்படுகிறது. எனவே, ஏசாயா 4:2ல் அவரை தெய்வத்துவமானவர் என்று சொல்லப்பட்டிருப்பதை பார்த்தோம், இங்கு அவரை தேவ மனிதன் என்கிறார், 100 சதவிகிதம் மனிதன்.

“அவர் மாம்சத்தில் வந்து நமக்குள்ளே பெத்லகேமில் குழந்தையாக பிறந்து நம்மத்தியில் வாசம்பண்ணினார்.”

இன்னொரு விஷயம், ஜான், அதை சகரியா 6:12-13ல் பார்க்கலாம். “அவனோடு சொல்லவேண்டியது, சேனைகளின் கர்த்தர் சொல்கிறார், இதோ,”மறுபடியும் வருகிறது, ஹே,ஹே, இங்க கவனி, “கிளை என்னப்பட்டவர் வருவார், அவர் தமது ஸ்தானத்திலிருந்து முளைத்தெழும்புவார்.” இ;நத இடத்தில் பெயர்சொல் மற்றும் விளைச் சொல் இரண்டும் இருக்கிறது. “அவர் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவார். அவரே கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவார். ஆவர் மகிமைபொருந்தினவராய் தம்முடைய சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்து ஆளுகைசெய்வார்.” இங்கு சொல்லப்பட்டிருக்கும் காரியம் மிக தெளிவாக இருக்கிறது, சகரியா 3ல் அவரை ஒரு மனுஷனாக பாவிக்கப்படுவதால், லூக்கா சுவிசேஷத்தில் அவர் மனிதனாக வந்தார் என்று கூறப்படுவது நிருபனம் ஆவதோடு,இதை மாற்கு சுவிசேஷத்திலும் நாம் பார்க்கமுடியும், ஏனென்றால், அதில், “நம்முடைய கர்த்தராகிய இயேசு ஊழியம் கொள்ளும்படிக்கு அல்ல ஊழியம் செய்யும்படிக்கும்,” மாற்கு 10:45, “அநேகரை மீட்கும்பொருளாக பலியாக தன்னை கொடுத்தார் என்கிறது.”

மேசியாவைக் குறிக்கு 4 உவமாணங்கள் அவர் ராஜா, அநேகருக்காக பலியானவர், விசுவாசிக்கிறவர்களாகிய நமக்காக பலியானார், அவர் மனிதனாக வந்தார், தேவ - மனிதன், அவர் தெய்வத்துவமுள்ளவர்கள், தேவனால் அனுப்பப்பட்டவர். ஓ, ஆதி

திருச்சபைகளில் இதைதான் அவர்கள் திரும்ப திரும்ப பிரசங்கித்துக்கொண்டிருந்தனர் மேலும் அவர்கள் மேசியாவைக் குறித்து கூறும் இந்த ஐந்து பகுதிகளை உபயோகித்து அவரை பிரகடனப்படுத்தினர்.

**ஆன்கர்பெர்க்:** டாக்டர் பாக், இதை ஏற்றுக்கொள்ளும் அநேக யூத நண்பர்கள் என்னிருக்கிறார்கள், ஆமா, நாம் மேசியாவைக் குறித்து பேசுகிறோம் அவர் தாவீதின் குமாரனாக இருக்கிறார் அவர் ராஜாவாக வரப்போகிறார். நாம் இப்போது பார்த்துக்கொண்டிருக்கும் வசனத்தின்படி அவர் நம்முடைய நீதியாயிருக்கிற கர்த்தராக இருப்பார், எல்லாருக்கும் ஒரு கொக்கிபோடுவது போலிருக்கும். இதனுடைய உண்மையான அர்த்தம் என்ன?

**பாக:** சரி,நாம் பார்த்துக்கொண்டிருக்கும் இந்த நபர் தேவனோடு இணைக்கப்பட்டவராக இருக்கிறார் அதனால் அவரைப் பார்க்கும்போது நாம் தேவனைக் காண்கிறோம். மேலும் பல வேதபகுதிகள் இதற்கு நேராக நம்மை நடத்திச் செல்வதாக இருக்கிறது என்பது உண்மை. சங்கீதம் 110:1 இதை நாம் ஏற்கனவே பார்த்தோம், தேவனோடு உன்னதத்தில் வீற்றிருக்க உரிமை பெற்ற தகுதியான ஒருவர், அவருடைய வலப்பக்கத்திலிருந்து செயல்படுபவர், என்பதை பார்த்தோம். இதே காரியத்தை வெளிப்படுத்திடும் அடுத்த வேத பகுதியை நாம் பார்க்க இருக்கிறோம், தானியேல் 7:13-14. இதில் ஒரு மனிதர் மேகங்களோடு வருகிறார். மேகங்களில் பிரயாணிப்பது மிகவும் அரிதான ஒன்று.

ஒரு குறிப்பிட்ட நபர் மட்டுமே மேகங்களில் பிரயாணிக்க முடியும். இங்கு ஏதோ மாயாஜால கம்பளத்தை பற்றி நாம் பேசவில்லை. மத்திய கிழக்கிலிருந்து ஒருவர் கையில் விளக்கு ஏந்திக்கொண்டு வருவதை பற்றிபேசவில்லை. நாம் பேசிக்கொண்டிருக்கும் இந்த காரியம் முற்றிலும் தனித்தன்மை கொண்ட தெய்வீகமான செயல்;. தேவனே வானங்களை கட்டுப்படுத்துகிறார். தேவன் தாமே மேகங்கள் மீதில் வருகிறார். தேவன் தான் இந்த சிருஷ்டிப்புகளை ஆளுகை செய்கிறார். எனவே பல வேதபகுதிகளோடு இந்த பகுதியும் நமக்கு வலியுறுத்தும் காரியம் நாம் பேசிக்கொண்டிருக்கும் நபர் ஒரு சாதாரண மனிதன்னல்ல என்பதுதான். தனித்துவம் பெற்ற ஒருவராபற்றி பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

**ஆன்கர்பெர்க்:** ஆமா, அருமையான தகவலைப் பெற்றுக்கொண்டோம் நாம் தொடர்ந்து தானியேல் 7ஐ குறித்த பார்க்கப்போகிறோம். ஆனா இப்போது இதை பார்த்துக்கொண்டிருக்கும் உங்களிடம் கேட்கிறேன்: நீங்க இயேசுவை பார்க்கும்போது, இயேசுவைக் குறித்து வாசிக்கும்போது, நான்கு சுவிசேஷங்களிலும் இயேசு தனக்கு கொடுத்திடும் பெயராக எதை சொல்லுவீர்கள்? ஒரே ஒரு டிபயரை அவர் 81 முறை பயன்படுத்தியிருக்கிறார் -- இதுவரை யாரும் சொல்லாத - பெயர் அது "மனுஷ குமாரன்". உங்களுக்கு தெரிந்திருப்பதை, நாம் தானியேல் 7:13ல் பார்க்கிறோம், இந்த மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் கர்த்தத்துவமும் அதிகாரமும் வல்லமையும் கனமும் னொடுக்கப்பட்டவர். சகல ஜனங்களும்

ஜாதிகளும் பாஷைக்காரரும் சேவிக்கும் இவர் யார்? தானியேல் சொல்லுகிற இந்த பூமி எதைக் குறிக்கிறது  அதில் இயேசு தன்னை எப்படி நிலைப்படுத்திக்கொண்டார்? இப்போது ஒரு இடைவேளை எடுத்துக்கொள்வோம் திரும்ப வந்ததும் இவர்கள் அதைப் பற்றி நமக்கு சொல்லுவார்கள் இதை நீங்கள் தவறவிடவேண்டாம். இணைந்திருங்கள்.

*****

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட் மீண்டும் வருக. நாம் பேசிக்கொண்டிருப்பது டாக்டர். வால்டர் கெய்சர் மற்றும் டாக்டர்; டேரல் பாக். சரி, டேரல், பழைய ஏற்ப்பாட்டிலுள்ள இந்த தீர்க்கதரிசனத்தை பற்றி சொல்லுங்கள். இப்போது தானியேல் 7ஐ பார்க்கலாம், யூத சமுதாயத்தில் மிகவும் மரியாதைக் குறிய அடுத்த தீர்க்கதரிசி. அவர் இந்த தீர்க்கதரிசன வார்த்தைகளை சொல்லியிருக்கிறார். அந்த வசனம் சொல்கிறது, “இராத்தரிசனங்களிலே நான் பார்த்துக்கொண்டிருக்கையில் இதோ மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார். அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடம் மட்டும் வந்து,” இது யார்? “அவர் சமீபத்தில் கொண்டுவரப்பட்டார். அவருக்கு கர்த்தத்துவமும் மகிமையும் ராஜரிகமும் கொடுக்கப்பட்டது. சகல ஜனங்களும் ஜாதிகளும் பாஷைக்காரமும் அவரையே சேவித்தார்கள். அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவம் அது ஒழிந்துபோகாதது. அவருடைய ராஜ்யம் ஒருகாலும் அழியாததுமாயிருக்கும்.” மனுஷ குமாரனைப் பற்றி தானியேல்

சொல்லும் இந்த வார்த்தைகளை வியக்க வைக்கும் வார்த்தைகள். இந்த பகுதியை விளக்கிடுங்க. எப்படி விளங்கிக்கொள்ளலாம்?

**பாக:** சரி, இது ஒரு மிக,மிக முக்கியமான பகுதி. உண்மையில், நான் இந்த மூன்று பகுதிகள் அதாவது ஏசாயா 53, சங்கீதம் 110:1 மற்றுமு; தானியேல் 7, மேசியா யார் என்பதை தெளிவாக எடுத்துரைக்கும் இந்த மூன்று பகுதிகள் நமக்கிருக்கிறது. மனுஷகுமாரன், இந்த வார்த்தை சுவாரஸ்யமாக இருக்கிறது. இதனுடைய அர்த்தம் மனிதனுடைய குமாரன் என்பதாகும். கால்லோவின் மகன், ஜானின் மகன், தாவீன் மகன், மனுஷனுடைய மகன். ஒருவிதத்தில் பார்த்தால் மனிதனுக்குள் ஒரு நபர் என்பதை கூறுகிறது. ஆனா இந்த மனிதர் மற்றவர்களைவிட மிகவும் வித்தியாசமானவர். அவர் மேகங்களுடனே வருவார். அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து, அது தேவனைக் குறிக்கிறது. தேவன் அவருக்கு அதிகாரத்தை கொடுத்திருக்கிறார். அவரை நாம் சேவிக்கும்படிக்கு அதிகாரமுடையவர்.

சரி, இ;நத வேத பகுதியில் சில கருத்துக்களை மக்கள் பரவலாக சொல்வதுண்டு, “ஓ, மனுஷகுமாரன் என்பது பரிசுத்தவான்கள். இஸ்ரேலைக் குறிக்கிறது.” உண்மையில், இந்த வசனத்தின் பின்பாதியில் ஜாதிகள் ஜனங்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது, அதனுடைய அர்த்தம் இந்த நபருக்கு ஜனங்களோடு இருக்கும் தொடர்பை கூறுகிறது. நாம் ராஜ்யத்தைக் குறித்து பேசினோம். ராஜாவைப் பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம். இந்த தரிசனத்தில் இந்த ஜனங்களை ஜாதிகளை வழிநடத்து ராஜ்யத்தையும்

ராஜாவையும் பற்றி சொல்லப்படுகிறது, எனவே ராஜாவைக் குறித்து பேசாமல் வெறும் ராஜ்யத்தைக் குறித்து பேச இடமில்லை. இவரைத்தான் சேவிக்கிறார்கள். வசனங்களில் இஸ்ரவேலரையோ மற்ற ஜாதியாரையோ சேவித்ததாக சொல்லப்படவில்லை. ஒரு தனிப்பட்டவரையே சேவிக்கிறோம். அந்த தனிப்பட்ட நபர் இவர்தான்.

சரி, இயேசு இந்த பெயரை புதிய ஏற்ப்பாட்டில் பயன்படுத்தியிருக்கிறார். இயேசுவின் செயல்களில் சுவாரஸ்யமானது என்னவென்றால், அதாவது, மக்களுடைய கருத்துப்படி, அவர், இயேசு தம்மைமேசியாவாக எண்ணி பேசினார் என்பது. அவர் தன்னை தேவனுடைய குமாரன் என்று கூறினார். அவர் தன்னை தாவீதின் குமாரன் என்றார். இந்த பெயர்களை அவர் பயன்படுத்தி தன்னுடைய அடையாளத்தை மாற்றிக்கொண்டதாக நினைத்தனர். நோ,நோ, நோ, நோ,நோ. அவர் பயன்படுத்தியது: மனுஷகுமாரன், 81 முறை இயேசுவே சொல்கிறார். இயேசுவோடு இருந்தது, இயேசுவுக்கு விசேஷமானது, புதிய ஏற்ப்பாட்டு முழுவதிலும் மற்றவர்கள் இந்த பெயரை உபயோகிக்கவில்லை. எனவே அவருடைய பாணியில் அவர் தம்மைப் பற்றி சொல்லிக்கொண்டது இதுதான். எதனால் இந்த மனிதத்தன்னை தெய்வீக வல்லமை மற்றும் அதிகாரம் இவைமூன்றும் தனித்தன்மையோடு இணைந்திருக்க காரணம் என்னவென்று நினைத்தேன். இந்த தனித்துவம் பெற்ற மேகங்களுடன் வந்து நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து அவரிடத்தில் அதிகாரத்தை வல்லமை பெற்றவருக்கும், சங்கீதம் 110:1ல் பார்க்கிறபடி

அவருடைய வலதுபாரிசத்தில் இருந்து அவருடைய திட்டத்தின்படி தீர்மானத்தின்படி நம்மை தேவனோடு இணைப்பதற்கும் சம்பந்தம் இருக்கிறது. இதுதான் அந்த புதிரிலுள்ள துண்டுகள் அதினதின் ஸ்தானத்தில் நிற்பதை பார்த்து, எனக்கு புரிந்துவிட்டது என்று சொல்வதாகும்.

**ஆன்கர்பெர்க்:** ஆமா. வால்டர், இந்த பகுதியை பற்றிய உங்கள் கருத்து?

**கெய்சர்:** வெல், இந்த பகுதியில் சகல ஜாதியாரும், இந்த பூமியிலுள்ள சகல ஜனங்களும், எல்லா பாஷைக்காரரும் அவரையே சேவித்தார்கள் என்று கூறப்பட்டுள்ளது. மேன், என்னவொரு அருமையான காலம் அருமையான ராஜா! தொடர்ந்து பார்க்கலாம். அவர் ஆளுகை செய்திடும் இந்த அவருடைய ராஜ்யம் ராஜரிகம் ராஜாசனம் ஒருபோதும், ஒருகாலும், ஒருநாளும், என்றைக்கும் -- இந்த வார்த்தை என்னை திகைக்க வைக்கும் - ஒருகாலும் அழியாததாயிருக்கும். அது தொடர்ந்து கொண்டேயிருக்கும். எனவே இந்த மேசியாவைக் குறித்த வார்;த்தைகள் நமக்கிருக்கிறது. அவர் ஜெயம்பெற்றார். அதை வாக்குப்பண்ணினார். ஜெயமெடுப்பேன் என்றிருந்தார். இதோ அந்த நாள், இதை நாம் எதிர்காலத்தில் பார்க்போம், அதற்கான எல்லா அடையாளங்களையும் அந்த நாள் நெருங்கிவிட்டதை வெளிப்படுத்துகிறது.

இங்க 66 புத்தகங்கள் இருக்கிறது கருப்பொருள் ஒன்றுதான். கற்பனை செய்ய முடியுமா, ஜான்: 1600 வருடங்கள், 40 பேர்

எழுதியிருக்கிறார்கள், ஒவரை ஒருவர் பார்த்தது கிடையாது, ஆனா ஒன்றையே மையமாக வைத்திருந்தனர். இந்த மாதிரி வேறெந்த புத்தகமும் கிடையாது. இதுவரைக்கும் நாம் இப்படிபட்ட விஷயத்தை கேட்டது கிடையாது ஒரே கருப்பொருளை வைத்து எல்லாவற்றையும் இணைத்து நித்திய ஜீவனை அடைந்து பரலோகத்திற்கு செல்ல இந்த நபரை நாம் விசுவாசிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நமக்கான அழைப்பு இதுதான், நாம் அவரிடத்திற்கு வரNவுண்டும். ஜீவனுள்ள தேவனை முழு இருதயத்தோடு நம்பி விசுவாசிக்காமல் இருப்பது அபத்தமான காரியமாக இருக்கும். நீங்கள் அவரை நம்பவேண்டும்.

**ஆன்கர்பெர்க்:** எஸ். நாம் தொடர்ந்து பார்க்க இருக்கிறோம். தேவன் கொடுத்திருக்கும் தீர்க்கதரிசனங்களை தொடர்ந்து பார்த்திடுவோம். இப்ப உங்களுக்காக கேள்வியை கேட்க விரும்புகிறேன்: தேவன் இவருடைய பிறப்பையும் பிறக்கும் இடத்தையும் நகரத்தையும் முன்னறிவித்திருக்கிறார் என நினைக்கிறீர்களா? அவர் அவ்வளவு துணிவோடிருந்தாரா? ஆவர் துணிவுள்ளவராக இருந்தார் என்பதை நாம் பார்க்க இருக்கிறோம். அதோட கூட நாம் பார்க்க இருப்பது, மேசியா எங்கு சங்கரிக்கப்படுவார் என்று தேவன் பழைய ஏற்ப்பாட்டில் சொல்லியிருக்கிறாரா? அருமையான விஷயங்கள்! இதைப் பற்றி அடுத்த வாரம் பேச இருக்கிறோம். நீங்களும் இணைந்திருப்பீர்கள் என நம்புகிறேன்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2014 A.T.R.I.